


கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூவனூர் கிராமத்தில் கூவனூர் சாங்கியம், பிள்ளையார்பாளையம் கிராமங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு சார்பில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 08.02.2026 அன்று திறந்து வைத்து, பொதுமக்களிடம் உரையாற்றினார், இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி சார்பில் மரக்காணம் மத்திய ஒன்றியம், வேப்பேரி, சிறுவாடி முருக்கேரி கலைஞர் திடலில் நடைபெற்ற 'ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்' தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில் மாநிலக் கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன் சிறப்புரை ஆற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய சேர்மன்கள் தயாளன், சொக்கலிங்கம், துணைச் சேர்மன்பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### மருந்துகளின் பற்றாக்குறையை சமாளிக்க

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, பிப்.11-

நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர மருந்து நிறு வனங்களுக்காக புதுப்பிக்கப்பட்ட மருந்துத் தொழில் நுட்ப மேம்படுத்தல் உதவித் (RPTUA) திட்ட செயல்பாடுகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகள் வருமாறு:-

நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர மருந்து நிறுவனங்களுக்காக புதுப்பிக்கப்பட்ட மருந்துத் தொழில் நுட்ப மேம்படுத்தல் உதவி (RPTUA) திட்டத்தை ஒன்றிய அரசாங்கம் தொடங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

RPTUA திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, மாநிலம் மற்றும் ஆண்டு வாரியாக குறிப்பாக தமிழ்நாட்டில்நிறுவப்பட்ட மற்றும் பயன்பெற்ற மருந்துகளின் பட்டியல் மற்றும்

RPTUA திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகை, ஆண்டு மற்றும் மாநில வாரியாக தருக? (குறிப்பாக தமிழ்நாட்டில்)

மருந்துகள் மற்றும் மருந்துகளின் கடுமையான பற்றாக்குறையைச் சமாளிக்க, தனியார் துறையை ஊக்குவிப்பதில் அதிக மருந்து நிறுவனங்களை நிறுவுவதற்கு அரசு ஆர்வமாக உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்

அதற்கு ஒன்றிய அரசின் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தில் அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர மருந்து நிறுவனங்களுக்காக புதுப்பிக்கப்பட்ட மருந்துத் தொழில் நுட்ப மேம்படுத்தும் நோக்கில் திருத்தப்பட்ட அட்டவணை எம் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் நல்ல உற்பத்தி தரநிலைகள் (WHOPracticing Standards GMP) ஆகியவற்றுக்கு இணங்க, தற்போதுள்ள மருந்து அலகுகளின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதை எளிதாக்கும் நோக்கில், மார்ச், 2024 இல், திருத்தப்பட்ட மருந்துத் தொழில்நுட்ப மேம்படுத்தல் உதவித் திட்டத்தை (RPTUAS) மருந்துத் துறை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் நிதிச் செலவு 2024-2025 முதல் 2025-2026 வரை 300.10 கோடி ஆகும்.

RPTUAS இன் கீழ், மருந்துப் பிரிவுகள் பின்வரும் வகைகளின்படி கடந்த மூன்று ஆண்டுகளில் அவற்றின் சராசரி வருவாயின் அடிப்படையில் அதிகபட்சமாக 2.00 கோடிக்கு உட்பட்டு 10% முதல் 20% வரையிலான ஊக்கத் தொகையைப் பெறத் தகுதியுடையவை:

1 கோடி முதல் 50 கோடி வரை முதலீட்டின் சதவீதமாக 20% ஊக்கத் தொகையும்

50 கோடி முதல் 250 கோடி வரை

முதலீட்டின் சதவீதமாக 15% ஊக்கத் தொகையும்,

250 கோடி முதல் 500 கோடி வரை

முதலீட்டின் சதவீதமாக 10% ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநிலத்தில் மொத்தம் 5.92 கோடி மானியத்துடன் கூடிய ஐந்து யூனிட்கள் உட்பட மொத்தம் 248.20 கோடிக்கு 255 மருந்து நிறுவனங்களுக்கு மானியம் அளிக்கப்பட்ட திட்டங்களில் இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1945 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட அட்டவணை எம் மருந்து விதிகள் மற்றும் உலக சுகாதார அமைப்பின் நல்ல உற்பத்தி நடைமுறைகளுக்கு இணங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் சான்றிதழைப் பெற்றவுடன் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவியை விடுவித்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவை செய்யப்பட வேண்டும்.

RPTUAS இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மாநில மற்றும் ஆண்டு வாரியான 255 மருந்து நிறுவனங்களின் பட்டியல் உள்ளது.

31.1.2026 நிலவரப்படி, அங்கீகரிக்கப்பட்ட 255 மருந்து நிறுவனங்களில், 23.12.2025 அன்று நடைபெற்ற திட்ட வழிகாட்டுதல் குழு கூட்டத்தில் 19 மருந்து நிறுவனங்களுக்கு 18.25 கோடி ஊக்கத் தொகை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

மருந்துத் துறையால் செயல்படுத்தப்படும் உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (பிஎல்ஐ) திட்டங்கள், மருந்துகள் மற்றும் மருந்து மருந்துகளைத் தயாரிக்க அதிக மருந்து நிறுவனங்களை நிறுவுவதற்கு தனியார் துறையை ஊக்குவிக்கிறது.

திட்ட வாரியான விவரங்கள் பின்வருமாறு:

(i) இந்தியாவில் முக்கியமான KSMs/DIs/APIகளின் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான PLI திட்டம் (பொதுவாக மொத்த மருந்துகளுக்கான PLI திட்டம் என அழைக்கப்படுகிறது): மொத்த பட்ஜெட் செலவீனமான 6,940 கோடியைக் கொண்ட இந்தத் திட்டம், முக்கியமான செயலில் உள்ள மருந்துகளின் விநியோகத்தில் இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒற்றை மூலத்தை அதிகமாகச் சார்ந்திருப்பதால் இடையூறு ஏற்படும் அபாயம். இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிரீன்ஃபீல்ட் திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் 41 அடையாளம் காணப்பட்ட KSMs/DIs/ APIs தயாரிப்புகளின் விற்பனைக்கு நிதிச் சலுகைகளை இந்தத் திட்டம் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ், 33 மொத்த மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான 48 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(ii) மருந்துகளுக்கான PLI திட்டம்: 15,000 கோடி மொத்த பட்ஜெட் செலவீனத்தைக் கொண்ட இந்தத் திட்டம், இந்தத் துறையில் முதலீடு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இந்தியாவின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதையும், மருந்துத் துறையில் அதிக மதிப்புள்ள பொருட்களுக்கான தயாரிப்புகளை பல்வகைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

உயிர் காக்கும் மருந்துகள், சிக்கலான ஜெனரிக் மருந்துகள், காப்புரிமை பெற்ற மருந்துகள் அல்லது காப்புரிமை காலாவதியை நெருங்கும் மருந்துகள், ஆட்டோ இம்யூன் மருந்துகள், புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் போன்ற உயர் மதிப்பு மருந்துகளின் உற்பத்திக்கு ஊக்கமளிக்கிறது. அத்துடன், பி.எல்.ஐ. திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டதைத் தவிர, கே.எஸ்.எம்./ டி.ஐ.கள்/ ஏ.பி.ஐ.களின்

உற்பத்தியையும் ஊக்குவிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், கிரீன்ஃபீல்ட் மற்றும் பிரவுன்ஃபீல்ட் திட்டங்கள் மூலம் தயாரிக்கப்படும் மருந்துகள் மற்றும் இன் விட்ரோ மருத்துவ சாதனங்களை (IVDs) தயாரிப்பதற்கு 55 விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி வடக்கு மாவட்டம், தேனி தெற்கு ஒன்றியம், வீரபாண்டி பேரூரைச் சேர்ந்த எஸ்.பி.சாந்தகுமார், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்" துரைமுருகன்
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 10.02.2026. தி.மு.க.



அனைத்து இந்திய சாம்பியன்ஷிப் 2025–2026 உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெற்ற PENCAK SILAT போட்டியில் பதக்கங்கள் வென்ற விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களை பாராட்டி அவர்கள் மென்மேலும் சிறந்து விளையாட விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌமசிகாமணி வாழ்த்துக்களை சொல்லி மகிழ்ந்தார். தொ.மு.ச நிர்வாக பணியாளார் சங்க செயலாளர் வாலிபால் மணி, ஒன்றிய அவைத்தலைவர் முரளி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசு – அ.தி.மு.க.வைக் கண்டித்து

# நாளை நடைபெறும் அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்போம்!

## விவசாயிகள்- தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன். குமார் அறிவிப்பு!



சென்னை, பிப்.11-

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மத்தியில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான ஆட்சி அமைந்தப்பின் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும், புதிய திட்டங்களை அறிவிப்பதிலும், தொடர்ந்து மோடி அரசு துரோகம் செய்து வருவது அனைவரும் அறிந்ததே!. இதனைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நடைபெறும் நாடு தழுவிய கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி முழுமையாக பங்கேற்கிறது.

ஜி.எஸ்.டி. என்கிற வரி விதிப்பின் மூலம் மாநிலங்களின் நிதியை சுரண்டி எடுக்கும் ஒன்றிய அரசு, பாரதிய ஜனதா கட்சி அரசு இல்லாத மாநிலங்களுக்கு நிதி பகிர்வில் தொடர்ந்து வஞ்சனை செய்து வருகிறது. உத்தரபிரதேசத்திற்கு 2.5 லட்சம் கோடிக்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்யும் மோடி அரசு, தமிழ்நாட்டுக்கு 62 ஆயிரம் கோடிக்கும் குறைவாகவே நிதியை ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டிற்கு பச்சை துரோகம் செய்து வருகிறது.

அய்யன் திருவள்ளுவரைப் பற்றியும், தமிழைப் பற்றியும், ஆங்காங்கே பேசும் மோடி அவர்கள் அந்த மொழியின் வளர்ச்சிக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு? கீழடி மற்றும் ஆதிச்சநல்லூர் ஆய்வுக்கு பின்னர் தமிழ் மொழியின் காலம் 3500 ஆண்டுகளுக்கு முந்தையது என அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டு இருக்கிற தமிழ் மொழியை இதுவரை ஆட்சி மொழியாக்கம் செய்யாதது ஏன்? திருக்குறளை ஏன் தேசிய நூலாக அறிவிக்கவில்லை? இந்த தமிழின் வளர்ச்சிக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு? மக்களால் பேசப்படாத செத்துப்போன சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? மோடி அரசு பதில் சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட மாநில மொழிகளை அழித்து, ஒழித்திடும் நோக்கில் மும்மொழி கொள்கையை அறிவித்து, அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனால் கல்விக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய சுமார் 3000 கோடி ரூபாயை இது வரையில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யாமல் துரோகம் செய்து வருகிறது.

மதுரை, கோவைக்கான மெட்ரோ ரயில் திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட்டுள்ளது. ஏற்கனவே நடைபெற்று வரும் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு உரிய நிதியை வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானப் பணி ஆமை வேகத்தில் நகர்ந்து வருகிறது. இவை எல்லாம் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகம் ஆகும்.

கிராமத்து ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய 100 நாள் வேலை திட்டத்தை அடியோடு நசுக்கி, நிறுத்திடும் வகையில் ஒன்றிய அரசு அதன் பெயரை மாற்றி நிதி ஒதுக்கீடு செய்வதை நிறுத்தி, கிராமத்து ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்து வருகிறது. இந்திய விவசாயிகளின் வெளிப்படையான எதிரியான ஒன்றிய அரசு விவசாயத் தொழிலாளர்களையும் வஞ்சிக்கிறது.

ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்தில் இருந்து போராடிப் பெற்ற தொழிலாளர்களுக்கான சட்டங்களை முதலாளிகளுக்கு ஆதரவாக, கார்ப்பரேட் நிறு வனங்களுக்கு சாதகமாக அந்த சட்டங்களை எல்லாம் மாற்றி நான்கு கோடுகளாக தொகுத்து கோடிக்கணக்கானத் தொழிலாளர்களின் எதிர்காலத்தை பாழ்படுத்தி உள்ளது ஒன்றிய அரசு. இப்படி தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், தமிழ்நாட்டிற்கும் எதிரான மோடி அரசின் செயல்பாடுகளை கண்டித்து திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாளை (12.02.2026) நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்து இடங்களிலும் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி முழுமையாக பங்கு கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆடை தயாரிப்பாளர்கள் தங்களது ஏற்றுமதியில் சந்தித்து வரும்

# இன்னல்களை தடுத்திட அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

## மாநிலங்களவையில், எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி,பிப்.11-

திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் 06 பிப்ரவரி 2026 அன்று மாநிலங்களவையில், ஐரோப்பிய நாடுகள், பங்களாதேஷ், வியட்நாம், துருக்கி போன்ற நாடுகள், வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தங்களை மேற்கொண்டிருப்பதால், இந்திய ஆடை தயாரிப்பாளர்கள் ஏற்றுமதியில் சந்தித்து வரும் இன்னல்களை ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும், அவர்களின் துயரைக் களைந்திட அரசிடம் ஏதேனும் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளதா? என்றும், ஐரோப்பிய யூனியனுடன், வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் திட்டம் ஏதும் உள்ளதா? என்றும், ஜவுளித் துறையில் நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ள ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என்று ஒன்றிய அரசின் வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜித்தின் பிரசாதா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகத் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:

ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன், இந்திய அரசு, கடந்த ஜனவரி 2026ல் வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இதன் மூலம், இந்திய ஏற்றுமதியில் வளர்ச்சியை பெருக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இந்திய ஆடைகளுக்கும், ஜவுளிப் பொருட்களும் விதிக்கப்பட்டிருந்த 12 சதவீத இறக்குமதி வரியை ஐரோப்பிய யூனியன் நீக்கியுள்ளதால், ஏற்றுமதியில் வளர்ச்சி வெகு விரைவில் ஏற்படும் என்றும், எனவே பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் துருக்கி போன்ற நாடுகளுடன், இந்திய ஆடை தயாரிப்பாளர்கள் போட்டி போடும் நிலை ஏற்பட்டு உள்ளது என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஓமன் ஆகிய நாடுகளுடன் வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக ஜவுளித் துறையில் நீண்ட கால முதலீடுகள் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு ள்ளது என்றும், வெகு விரைவில் ஆடைகள் மற்றும் ஜவுளிப் பொருட்களின் ஏற்றுமதியில் இந்திய தயாரிப்பாளர்கள் உச்சத்தை தொடுவார்கள் என்று இணையமைச்சர் ஜித்தின் பிரசாதா எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்துள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வளவனூர், பேரூராட்சி மன்ற அலுவலகத்தில், தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், வளவனூர் பேரூராட்சி மன்ற தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பா.அசோக் மற்றும் அரசு அலுவலர்கள், மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.